நாள் 28.11.2023.

அசல் வழக்கு எண் 12/2002

பி சா 1 அழகானந்தம், த/பெ இசக்கிமுத்து

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லும் காலத்தில் பட்டா எனக்கு கிரையம் கொடுத்தவர் பெயரில் இல்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொத்தை கிரையம் வாங்கிய போது கிரையம் தந்த நபரிடம் பட்டா பெற்று பார்த்தேனா என்றால், ஞாபகம் இல்லை. நான் சொத்தை கிரையம் பெற்ற பிறகு என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்துள்ளேனா என்றால், மாற்றியுள்ளேன் யார் பெயரில் இருந்து என் பெயருக்கு மாற்றினேன் என்றால், ஞாபகம் இல்லை. நான் பட்டா மாற்றம் செய்ய தாக்கல் செய்த மனுவின் நகல் என் கைவசம் வைத்திருக்கிறேனா என்றால், நாள் அதிகமாகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. என் பெயரில் பட்டா மாற்றம் ஆகியதற்கு விசாரணை நடைபெற்றதா என்றால், நான் மனு கொடுத்தேன் எனக்கு பட்டா தந்தார்கள். மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு ஞாபகம் இல்லை. என் பெயரில் பட்டா உள்ளதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால், பட்டா தாக்கல் செய்திருக்கிறேன். இந்த வழக்கில் வாதி பட்டா 1ம் வாதி பெயரில் இருந்ததாகவும் அதன் பின்னர் என்பெயரில் பட்டா மாற்றம் செய்துவிட்டதாகவும் ஆவணம் தாக்கல்செய்திருக்கிறார் என்றால், அது எனக்கு தெரியாது. வாதி நீதிம்ன்றத்தில் சாட்சியம் அளித்து தாக்கல் செய்த ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால், வழக்கறிஞா் மூலமாக

தெரிந்துகொண்டேன். 1ம் வாதி பெயரில் இருந்து எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்தது தொடர்பாக வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடவடிக்கை நடைபெற்றது என்றால், எனக்கு தெரியவில்லை. எனக்கு வருவாய் வட்டாட்சியரிடம் இருந்து அறிவிப்பு வந்ததா என்றால், நாளாகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு சொ்தை கிரையம் தந்த நபரின் பெயர் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு கிரையம் தந்த நபரின் பெயரில் உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் பத்திரம்தான் பார்த்தேன் பட்டா பார்க்கவில்லை. சொத்தை எனக்கு கிரையம் தந்த நபருக்கு கிரைய ஆவணம் மூலம் பாத்த்யிப்பட்ட சொத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல அவரது கணவர் கிரையம்பெற்ற சொத்து ஆகும். நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் எனக்கு சொத்தை கிரையம் கொடுத்த பாப்பாம்மாளின் கணவரான சுப்பையா தேவர் பெயரில் உள்ள ஆவணம் என்றால் சரிதான். சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு சுப்பையாதேவர் கார் ஓட்டுநராக இருந்த விவரத்தை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன் ஆனால் வாதிக்கு ஓட்டுநரா என்று கேட்கவில்லை. இந்த வழக்கில் வாதி தாக்ல்செய்த பிராதை படித்து பார்த்த பிறகு வழக்கு வாதிக்கு சுப்பையா தேவர் கார் ஓட்டிய விவரத்தை கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், அவர் அவருக்கு கார் ஓட்டியதாக எனக்கு தெரியவில்லை. பி வா சா ஆ 1 முதல் பி வா சா ஆ 3 வரையிலான கிரைய ஆவணங்களின் கிரையதாரர்கள் யார் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் பத்திரம் மூலமாக தெரிந்துகொண்டேன். புன்னைவனம்பிள்ளை

என்பவரை நான் நேரடியாக பார்க்கவும் இல்லை கேட்டு தெரிந்துகொள்ளவும் இல்லை என்று சொன்னால் , பத்திரம் மூலமாக தெரிந்துகொண்டேன். சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று எனக்கு அனுப்பிய அறிவிப்பான வா சா ஆ 5 ஆவணத்தை பற்றி கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. நான் ராதாபுரம் தாலுகா, அக்ரகாரதெரு, தெற்குகருங்குளம், விலாசத்தில் வசித்தேனா என்றால், வசித்தேன். தற்போது அங்கு இல்லை. சார் ஆட்சியர் சேரன்மகாதேவி அவர்கள் வா சா ஆ 5 மூலம் உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என் ாறல் அது பற்றி ஞாபகம் இல்லை. மேற்படி உத்தரவின்படி தாவா சொத்து அனுபவம் முழுவதும் வாதி வசம் உள்ளதாக கூறி எனது பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து உள்ளார்கள் என் ாறல், மோசடியாக உத்தரவு போட்டுள்ளார்கள். அந்த மோசடி உத்தரவை ரத்து செய்ய சார் ஆட்சியரிடமோ அல்லது மாவட்ட ஆட்சியரிடமோ மனு எதுவும் கொடுக்கவில்லையா என்றால், மனு கொடுக்கவில்லை பட்டா என் பெயரில் இருக்கிறது என்னிடம் அனுபவமும் இருக்கிறது. சொத்து என்னிடம்தான் இருக்கிறது. நான் தாக்கல் செய்துள்ள பி வா சா ஆ 7 பட்டா 21.01.2002 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா சா ஆ 5 ஆவணம் 26.09.2002 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா சா ஆ 5 க்கு பிறகு என் பெயரில் பட்டா இருந்ததை காட்ட எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்று சொன்னால் அது தவறு. பட்டா என் பெயரில்தான் இருக்கிறது. பட்டாவை ஒருமுறைதான் மாற்றுவார்கள். பி வா சா ஆ 6 என்பது பி வா சா ஆ 5 காலத்திற்கு முன்பு உள்ள ஆவணம் என்றால் சரிதான். அவ்வாறுதான்

உள்ளது. பி வா சா ஆ 7 ம் 21.01.2002 ல்தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல செய்துள்ள பி வா சா ஆ 8 தீர்வை ரசீது 11.01.2002 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இன்றையதேதிவரை என் அனுபவத்தில் சொத்து உள்ளது என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் எதுவும் நான் தாக்கல செய்யவில்லை என்றால், சரியல்ல பட்டாவும் தீர்வை ரசீதும் தாக்கல் செய்திருக்கிறேன். வேறு என்ன ஆவணம் வேண்டும் என்று சொல்லுங்கள் நான் தாக்கல் செய்ய தயாரக இருக்கிறேன். வா சா ஆ 8 ஆவணமான பட்டா 472 சர்வே எண் 342,345, 347 ஆகியவற்றிற்கு சுப்பிரமணியபிள்ளை மகள் பொன்னம்மாள் பெயரில் உள்ளது என்றால், சர்வே எண் 347 இவ்வழக்கில் கிடையாது. என் பெயரில்தான் இருக்கிறது மோசடி செய்து வாங்கியிருப்பார்கள். மோசடி பற்றிய விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால், கேட்பதை வைத்துதான் சொல்லுகிறேன். வழக்கு பிராதை படித்து பார்த்துதான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அரசு அதிகாரி பிறப்பித்த வா சா ஆ 5 உத்தரவினை மறைப்பதற்காகவும், வா சா ஆ 8 வினை மறைப்பதற்காகவும் மோசடியான ஆவணம் என்று நான் சொல்லுகிறேன் என்று சொன்னால் முற்றிலும் தவறனாது. சர்வே எண் 342, 345 சொத்துக்கள் தாவா சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 342 ல் கிணறு உள்ளதா அல்லது 345 ல் கிணறு உள்ளதா என்றால், நான் வாங்கிய சொத்தில் கிணறு இல்லை. ஆனால் ஸ்தலத்தில் கிணறு இருக்கிறது என்று சொன்னால் பார்த்திருக்கிறேன். கிணறு தாவா சொத்தில் எந்த திசையில் இருக்கிறது மேற்கே இருக்கிறது. சர்வே எண் 342, 345 சொத்துக்கள் எந்த எந்த திசையில் இருக்கிறது

என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியும். அதன் உட்பிரிவுகள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல தெரியும். சர்வே எண் 342, 345 உட்பிரிவுகளை பிரித்து காட்டுவதற்கு அத்து எதுவும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல வரப்புகள் இருக்கிறது. தாவா சொத்து எனது அனுபவத்தில் எந்த காலத்திலும் இல்லை என்று சொன்னால் அது தவறு. பாப்பாம்மாள் வருவாய் வட்டாட்சியரிடம் கொடுத்த வாக்குமூலம் பற்றி எனக்கு தெரியுமா என்றால, அவ்வாறு எந்த வாக்குமூலமும் பாப்பாம்மாள் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்தார்களா இல்லையா என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்ாறல், கேட்டு தெரிந்துகொண்டேன் அவ்வாறு அவர் கொடுக்கவில்லை. எப்போது கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால், பத்திரம் வாங்கியபோதும் வாங்கும் முன்பும் கேட்டு தெரிந்துகொண்டேன். வருவாய் வட்டாட்சியரிடம் பாப்பாம்மாள் ஒரு வாக்குமூலம் கொடுத்ததாக வாதி கூறியுள்ள விவரம் பாப்பா்ம்மாளிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன் அவ்வாறு எதுவும் கொடுக்கவி்ல்லை என்று பாப்பாம்மாள் கூறினார். எப்போது கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால், சரியாக ஞாபகம் இல்லை. சார் ஆட்சியர் அலுவலக அலுவலகர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சார் ஆட்சியரி டம் மோசடியான உத்தரவு வா சா ஆ 5 மோசடியான உத்தரவு என்று நாங்கள் எந்த கேள்வியும் எழுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1431 ம் பசலிக்கு சங்கரசுப்பிரமணியன், பொன்னம்மாள் பெயரில்தான் கிராம கணக்கு உள்ளது என்று சொன்னால் அது மோசடியாக வாங்கியிருப்பார்கள்.

வருவாய்த்துறை அதிகாரிகள் நான் தாவா சொத்தை அனுபவிக்கவில்லை என சா சா ஆ 5 ஆவணத்தின் மூலம் வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்று சொன்னால் அது தவறு. நான் வா சா ஆ 5 உத்தரவின்பேரில் மேல்முறையீடு செய்யாத காரணத்தினால் வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் இருப்பதை நான் ஒத்துக்கொண்டுள்ளேன் என்று சொன்னால் அது தவறு என்னுடைய அனுபவத்தில்தான் உள்ளது. தாவா சொத்திற்கு வாதிகளின் அனுபவத்தில் உள்ள கிணற் றில் இருந்து நீர் ஆதாரத்தை வைத்துதான் விவசாயம் செய்யப்படுகிறது. அது வேறு சர்வே எண் என்னுடைய சர்வே எண்ணுக்கும் அதற்கும் சம்பந்தம் கிடையாது. தாவா சொத்தை கிரையம் வாங்கிய காலத்தில் சர்வேயர் வைத்து நான் அளந்து பார்த்்தேனா என்றால், அளந்து பார்த்து எல்கை பார்த்துதான் கிரையம் வாங்கினேன். சர்வே எண் 342/2 க்கு வடக்கே யார் சொத்து உள்ளது என்று தெரியுமா என்றால், சர்வே எண் 342/2 நான் கிரையம் வாங்கவில்லை. சர்வே எண் 345/2 பி சொத்திற்கு வடக்கு என்ன இருக்கிறது என்றால், சங்கரசுப்பிரமணியன் இடம் இருக்கிறது. தெற்கே கிணறும், சங்கரசுப்பிரமணியன் இடமும் இருக்கிறது. சர்வே எண் 345/2 பிக்கு தெற்கே உள்ள சங்கரசுப்பிரமணிய பிள்ளைக்கு எவ்வளவு பரப்பளவு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சுப்பையா தேவரோ பாப்பாம்மாளோ பிராது தபசில் சொத்தை அனுபவி த்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வாதிகள் பெயரில் பட்டா எண் 166 இருந்து அதனை வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற சொன்னால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் வாதி அவரது சொத்தில் உள்ள கிணற்றில் இருந்துதண்ணீர் பாய்ச்சி

விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த பாப்பம்மாள் வருவாய் துறையினரிடம் ஆஜராகி பிராது தபசில் சொத்தை அனுபவிக்கவில்லை என வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது தவறு. நாளது தேதிவரை வழக்கு வாதிகள்தான் தாவா சொத்திற்கு தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது தவறு. நான் உண்மை விவரங்களை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று செர்னனால் சரியல்ல.நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் தற்போது செயல்முறையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் வேண்டியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று செரன்னால் சரியல்ல. நான் அரசு அதிகாரிகள் போட்டுள்ள உத்தரவை உள்நோக்கத்துடன் மோசடியானது என்று சொ்லலுகிறேன் என்று சொன்னால் அது தவறு. வருவாய் வட்டாட்சியரிடம் நான் ஆஜராகி வாக்குமூலம்அளித்ததை மறைக்கிறேன் என்று சொன்னால் அது தவறு ஞாபகம் இல்லை என்றுதான் நான் கூறியுள்ளேன். வழக்கு வாதிகள் கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.